விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 237 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 28 சனிக்கிழமை (13.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## 2 ஆயிரமாவது நாளை முன்னிட்டு

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மாபெரும் போராட்டம்



(கிளிநொச்சி)

வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள் தமது நீதிக்கான போராட்டத்தை ஆரம் பித்து 2 ஆயிரமாவது நாளை முன்னிட்டு கிளிநொச்சியில் நேற்று மாபெரும் போராட் டத்தை முன்னெடுத்தனர்.

(5ஆம் பக்கம் பார்க்க)




## 46 தமிழ் அரசியல் கைதிகளை

# விடுதலை செய்ய பணிகள் ஆரம்பம்

### நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ



(கொழும்பு)

சிறிய குற்றங்களுக்காக சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள 46 தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அடிப்படை நடவடிக்கைகளை ஆரம் பித்துள்ளதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தை

# இடைநிறுத்த நீதிமன்றம் மறுப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியினால் அவசரகாலச் சட்டம் விதிக்கப்பட்டதால், பொதுமக்களின் 11

# யாழ்.நகரில் வாள்வெட்டு

### ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மனோகராச் சந்தியில் நேற்றிரவு இடம்பெற்ற வாள்வெட்டு 11


## கொரோனா

# 9 பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 9 பேர் கொரோனாத் தொற்றினால் உயிரி 11

# கொழும்புத் துறைமுகத்தில் பாகிஸ்தானின் போர்க் கப்பல்



(கொழும்பு)

சீனாவில் கட்டமைக்கப்பட்ட பாகிஸ்தானின் ஏவுகணை தாங்கிய போர்க் கப்பலான தைமூர் (PNS Taimur) கொழும்பு துறைமுகத்தை வந்த டைந்துள்ளது.

இந்தக் கப்பல், ஷாங்காய் நகரிலிருந்து 11

# தபால் கட்டணம் அதிகரிப்பு

### வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

இலங்கையில் திருத்தப்பட்ட 11

## சீனக் கப்பல் விவகாரம்

# இலங்கைக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்கவில்லை

### இந்திய வெளியுறவு அமைச்சகம்



(கொழும்பு)

சீனக் கப்பலான யுவான் வாங் 5 தொடர்பாக இலங் கைக்கு இந்தியா அழுத்தம் கொடுப்பதாகக் கூறப்படும் அறிக் 11

# பிரதமர் ஆசனத்தில் தமிழர் அமர வேண்டும்

### அமைச்சர் ரமேஷ் பத்திரன



(கொழும்பு)

இன, மத, சாதிய பேதங்கள் இல்லாத நாட்டை உருவாக்க வேண்டுமாயின் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும் தமிழர் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் Theepan Creation Studio இற்கு வீடியோ எடிற்றர் (video editor) தேவைப்படுகின்றார்.

- குறைந்தது ஒரு வருடம் அனுபவம் உள்ளோர்.
- பழக விரும்புவோர் உங்கள் சுயவிபரக் கோப்பினை(CV) partheek33@gmail.com என்னும் முகவரிக்கு அனுப்பவும் (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம், நேர்முகத்தேர்வு இடம்பெறும், திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.)

(12417)

**இடம் : மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

**077 621 6741, 075 227 8354**


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின் பௌதிகவியல் பாட ஆசிரியர் திரு. **பொ. வரதராஜா** அவர்களின் அன்பு மாமனார்

அமரர்

### க.புஸ்பாங்கதன் (ரவி)

அவர்களின் 31 ஆம் நாள் நினைவில் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4733)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் நீராவியடி பிறவுண் வீதி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகரைக் காலத்துக்குக் காலமும் வேண்டிய பொழுதுகளிலும் பூசை செய்தும் பிள்ளையாரின் தன்நலம் கருதாத அணுக்கத் தொண்டனாகவும் எங்கட்கு ஆலோசகராகவும் பல வழிகளில் உற்றவராகவும் இருந்து மகிழ்ந்த **சுவாமிக்குருக்களின்** மகனும் அச்சுவேலி **குமாரசுவாமிக் குருக்களின்** பேரனுமாகிய

### பஞ்சாட்சர ஐயர்

ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகன் பாத கமலங்களைச் சென்றடைந்தமையையிட்டு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**வை.இரகுநாத முதலியார்**
**பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர்**
**ஸ்ரீ ஜெய நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயம்**

(12420)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- ❋ உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- ❋ உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- ❋ மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- ❋ அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- ❋ உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 13.08.2022 சனிக்கிழமை தொடக்கம் 19.08.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை.

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(C-4732)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 44[illegible] 3268, 077 73[illegible] 8745


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| அரும்பாக | | சருகாக |
|---|---|---|
| 20 | | 15 |
| 07 | | 07 |
| 1974 | | 2022 |

### அமரர் கலைமதி செல்லத்துரை

**கணக்காளர்**
**BBA(Hons), Dip in Pub.ADM, MA in Pub.ADM, LLB (Hons)**

அஞ்சாமை அறிவுடமை
தன்னம்பிக்கை தலைநிமிர்வோடு
தலைவணங்காத் தலைவியாய்
தூக்கமற்று உழைத்து
ஆளாகி நின்றவேளை
விதியோ காலனவன் சதியோ
மீளா வழி சென்று - எம்மை
ஆளாத் துயரில் ஆழ்த்தி
நீங்கா நினைவாகிப் போன
எங்கள் குடும்ப விளக்கே!
இப்பிறப்பில் நீஅமைதி கொள்!
மீண்டும் எழுந்துவா எம்மிடத்தே!!

ஓம் சாந்தி

(12408)

அமரர் கலைமதி செல்லத்துரை அவர்களின் மறைவு கேட்டு ஓடிவந்து உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

14.08.2022 நாளை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்திய, ஆத்ம சாந்தி நிகழ்வுகளும் மதிய போசன நிகழ்வும் நடைபெற உள்ளதால் அத்தருணம் உற்றார், உற வி னர்கள், நண்பர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இல.72/50 பனிக்கர் வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்**

நன்றி

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### நடராஜா மகேஸ்வரன்



வடமராட்சி கூவில் புலோலி தென்மேற்கு புலோலியை பிறப்பிடமாகவும் குவைத் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மகேஸ்வரன் 10.08.2022 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - சரஸ்வதி தம்பதியரின் அன்புப் புதல்வனும் அமரர் கல்யாணியின் அன்புக் கணவரும் குமணன் (குவைத்), பிரியங்கா (சுவிஸ்), நிருபா (சுவிஸ்), மிதுன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரிமளம், சின்னம்மா, புஸ்பமலர், றங்கா (லண்டன்), லலிதா, ரோகினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மருமகன் சுதர்சன் (சுவிஸ்), நிருஷனின் (சுவிஸ்) அன்புப் பேரனும் இரத்தினசிங்கம் (லண்டன்), சவுந்தராசா, றங்கநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவப்பிரகாசம், வேலாயுதம், சிவராமலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் மந்திகை கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றவாளியான கோட்டாவை உடனடியாக கைது செய்ய வேண்டும்

## தாய்லாந்து சட்டமா அதிபரிடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும் போர்க் குற்றவாளியாகவும் கருதப்படும் கோட்டாபய ராஜபக்ஷவை உடனடியாக கைது செய்யுமாறு தாய்லாந்து அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**

தாய்லாந்தில் 90 நாட்கள் வதிவிட அனுமதிபெற்று, நேற்று முன் தினம் கோட்டாபய தாய்லாந்து சென்றுள்ளார்.

இந்நிலையிலேயே தாய்லாந்து சட்டமா அதிபரிடம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இலங்கையில் கடந்த ஜூன் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சியையடுத்து நாட்டை விட்டுத் தப்பிச்சென்ற கோட்டாபய, மாலைதீவில் தஞ்சமடைந்தார்.

அதன் பின்னர் அங்கிருந்து சிங்கப்பூர் சென்றிருந்தார். அவ்வாறான நிலையில், சிங்கப்பூர் அரசாங்கத்திடம், கோட்டாபயவை கைது செய்யுமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பலனளிக்காத நிலையில், தாய்லாந்து அரசாங்கத்திடமும் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இனப்படுகொலை, மானிடத்திற்கெதிரான குற்றம் மற்றும் போர்க் குற்றங்களை புரிந்தமைக்கான நம்பத்தகுந்த சாட்சியங்கள் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை கூறுகின்ற விடயத்தை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி 1948 ஆம் ஆண்டு இன அழிப்பு சட்டத்தின் கீழும் 1949ஆம் ஆண்டு ஜெனிவா சட்டங்களின் கீழும் 1977 ஆம் ஆண்டு அடிசனல் ப்ரொட்டோகோல் (additional protocol) எனப்படும் கூடுதல் நெறிமுறையின் கீழும் சர்வதேச சட்டங்களின் கீழும் கோட்டாபயவை கைது செய்யுமாறு தாய்லாந்து சட்டமா அதிபரிடம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# மின்சாரக் கட்டண உயர்வினால் 50000 கோடி ரூபா வருமானம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பதன் ஊடாக இலங்கை மின்சார சபையின் வருமானம் மாதாந்தம் 50000 கோடி ரூபாவினால் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்பொழுது இலங்கை மின்சார சபை மாதாந்தம் 60000 கோடி ரூபா வரையில் நட்டமடைந்து வருகின்றது.

இந்நிலையில், தனியார் டீசல் மின் உற்பத்தி நிலையங்களில் மின்சாரம் பெற்றுக் கொள்வது உள்ளிட்ட காரணிகளினால் ஆண்டுதோறும் மின்சார சபை அடையும் நட்டம் அதிகரித்துச் செல்கின்றது.

இதேவேளை, மின்சாரக் கட்டண அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதற்கு பெரும் சிரமங்களை எதிர் நோக்குவர் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், மின்சாரக் கட்டண அதிகரிப்பு கைத்தொழில்துறை மற்றும் வர்த்தகத்துறை போன்றவற்றில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கான சம்பள உயர்வு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட பணியாளர்கள் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# ஐஸ்கிறீம், யோகட், இறைச்சி என்பவற்றின் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)


குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலைகள் உயர்வடையும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தினால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யோகட், ஐஸ்கிறீம் மற்றும் இறைச்சி வகைகள் என்பனவற்றின் விலைகள் உயர்வடையும் என சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணங்கள் 75வீதத்தினால் உயர்வடைந்தால் இவ்வாறு விலைகள் உயர்வடையும் எனத் தெரிவித்துள்ளார். (நி)

### உறவுகளின் போராட்டத்திற்கு ஆதரவாக

# பாராளுமன்றில் கூட்டமைப்பும் கவனயீர்ப்பு போராட்டம்



(கொழும்பு)

வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்தின் 2000 ஆவது நாளான நேற்றைய தினம் கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டமொன்று நடைபெற்றது.

இந்நிலையில் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் பாராளுமன்றினுள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர். (நி)

# இதுவரை 11 சிறுவர்களுக்கு கொவிட்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள சீமாட்டி ரிட்ஜ்வே மருத்துவமனையில் டெங்கு வைரஸ் மற்றும் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள சீமாட்டி ரிட்ஜ்வே மருத்துவமனையில் 51 சிறுவர்கள் டெங்கு காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 11 சிறுவர்கள் கொவிட் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் இருவர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி)

# சீன கப்பல் விவகாரத்தில் உடனடி இராஜதந்திர தலையீடு அவசியம்

## தயான் ஜயதிலக சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள சீனாவின் யுவான் வாங் - 5 ஆய்வுக் கப்பலின் இலங்கை பயணம் தொடர்பில், உடனடியாக உயர்மட்ட இராஜதந்திர தலையீடுகள் செய்யப்பட வேண்டும் என முன்னாள் சிரேஷ்ட இராஜதந்திரியான கலாநிதி. தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

அது வெளிவிவகார அமைச்சர் ஊடாகவோ அல்லது ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஒருவர் ஊடாகவோ அல்லது பிரதமரின் தலையீடாகவோ இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விசேட பிரதிநிதி, உடனடியாக சீனாவுக்கும் இந்தியாவுக்கும் சென்று, இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடைநிலைத் தீர்வுக்கு வருவது அவசியமானதாகும் என கலாநிதி. தயான் ஜயதிலக வலியுறுத்தியுள்ளார்.

சீனாவை கோபப்படுத்திக் கொண்டால், கடன் மறுசீரமைப்பு அல்லது வேறு கடனைப் பெற்றுக்கொள்வதில் பாரிய பிரச்சினை ஏற்படும்.

அதேநேரம், இந்தியாவை கோபப்படுத்திக்கொண்டால், அங்கும் பாரிய பிரச்சினை ஏற்படும். எமது அன்றாட வாழ்க்கைக்கு அவசியமானதை வழங்கியது இந்தியா.



எமக்கு அவசியமான சந்தர்ப்பத்தில், இந்தியா இவ்வாறாக நட்புறவை வெளிப்படுத்தும் நிலையில், இந்தியாவுக்கு பாதுகாப்பு பிரச்சினையை ஏற்படுத்தக்கூடிய சீனாவின் கப்பலுக்கு இடமளிப்பதாயின், அதனூடாக தாமாகவே குழியை வெட்டிக் கொண்டு, அதற்குள் இந்த அரசாங்கம் வீழ்ந்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில், முன்னாள் ஜனாதிபதியின் ஆசனத்தில் யார் அமர்வது என்பது குறித்து ஆராயாமல், நாட்டின் இராஜதந்திர உறவு குறித்து பரந்தளவில் சிந்தித்து செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது அவசரமாக இடம்பெற்ற ஒன்றல்ல. இந்தக் கப்பலை அனுப்புவது குறித்து, சீனா விடுத்த கோரிக்கைக்கு, இலங்கையின் வெளிவிவகார அமைச்சு எழுத்துமூலம் இணக்கம் தெரிவித்தது.

இது, எந்த வகையிலான கப்பல் என்பதை வெளிவிவகார அமைச்சு அறிந்திருக்கவில்லையா? குறித்த கப்பலில் அதிநவீன இலத்திரனியல் கட்டமைப்பு உள்ளது.

இந்தியா இதனை எவ்வாறு நோக்கும்? இந்தக் கப்பல், பயணிகளை ஏற்றிச்செல்லும் கப்பல் அல்ல. 2015 இல் சீனாவின் நீர்மூழ்கி கப்பல் தொடர்பில் இது போன்ற பிரச்சினை ஒன்று ஏற்பட்டது.

எனவே, இது போன்ற ஒன்று எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து முதலில் விசாரணை நடத்தி, அந்த நபர்கள் தொடர்பில் ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் சிரேஷ்ட இராஜதந்திரியான கலாநிதி. தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்பந்து உலக கிண்ணம் நவம்பர் 20 ஆரம்பம்

ரசிகர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த 22 ஆவது காற்பந்து உலகக்கிண்ணம் நவம்பர் 20 ஆம் திகதி கட்டாரில் ஆரம்பமாகின்றது.

32 அணிகள் பங்கேற்கும் இத்தொடரில், இந்தப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள அணிகள் 8 பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஏ பிரிவில் கட்டார், ஈகுவடார், செனகல், நெதர்லாந்து. பி பிரிவில் இங்கிலாந்து, ஈரான், அமெரிக்கா, வேல்ஸ். சி பிரிவில் ஆர்ஜென்டினா, சவுதி அரேபியா, மெக்ஸிகோ, போலந்து. டி பிரிவில் நடப்பு சம்பியன் பிரான்ஸ், டென்மார்க், துனிசியா, அவுஸ்திரேலியா. இ பிரிவில் முன்னாள் சம்பியன்கள் ஸ்பெயின், ஜேர்மனி மற்றும் ஜப்பான், கோஸ்டாரிகா. எஃப் பிரிவில் பெல்ஜியம், கனடா, மொராக்கோ, குரோஷியா. ஜி பிரிவில் பிரேஸில், செர்பியா, சுவிஸ்லாந்து, கேமரூன். எச் பிரிவில் போர்த்துகல், கானா, உருகுவே, தென் கொரியா ஆகிய அணிகள் இடம்பிடித்துள்ளன.

தொடரின் ஆரம்ப போட்டியில், தொடரை நடத்தும் கட்டார் அணியும் ஈகுவடார் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்தத் தொடர், டிசெம்பர் 18 ஆம் திகதி வரை நடைபெறும். (4)





## இரண்டாவது இருபது-20

# ஆப்கானை வீழ்த்தியது அயர்லாந்து அணி

அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் அணி 5 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் விளையாடுகிறது. முதல் இருபது-20 போட்டியில் அயர்லாந்து வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபது-20 பெல்பாஸ்டில் நடைபெற்றது. டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் முதலில் பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட் செய்த ஆப்கானிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 122 ரன்கள் எடுத்தது.

அயர்லாந்து பந்துவீச்சாளர்கள் துல்லியமாக பந்துவீசி ஆப்கானிஸ்தானை கட்டுப்படுத்தினர். ஆப்கானிஸ்தான் அணியில் அதிகபட்சமாக ஹஷ்மதுல்லா



ஷஹிதி 36 ரன்கள் எடுத்தார். அயர்லாந்து சார்பில் ஜோஷ்வா லிட்டில், மார்க் அடைர், காம்பெர் மற்றும் டெலானி ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். 123 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அயர்லாந்து அணி களமிறங்கியது. பால்பரின் பொறுப்புடன் ஆடினார். அரை சதம்டிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 46 ரன்னில் அவுட்டானார். டக்கர் 27 ரன் எடுத்தார். இறுதியில் அயர்லாந்து 19 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 125 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

டாக்ரெல் 25 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன்மூலம் அயர்லாந்து அணி இருபது-20 தொடரில் 2-0 என முன்னிலை பெற்றுள்ளது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2685

**மயூ**



துணியாத வரை
வாழ்க்கை
பயங்காட்டும்...

துணிந்து பார்
வாழ்க்கை வழி
காட்டும்.

**சங்கர்**

இருக்குறவன் சலித்துக் கொள்வதும்,
இல்லாதவன் ஏங்கி நிற்பதும் ஒன்னே
ஒன்னுக்குத்தான்.



பொண்டாட்டிக்கு...

**திருமாறன்**

நல்ல தகப்பனிடம் வளர்ந்த பெண்ணிற்கு
ஆணைப்பற்றிய எண்ணம் அழகானது...



நல்ல தாயிடம் வளர்ந்த ஆணுக்கு பெண்
ணைப்பற்றி எண்ணம் பேரழகானது...

**பிரியா**



காத்திருக்க
கற்றுக்கொள்..
எல்லாவற்றுக்கும்
ஒரு நேரம் இருக்கிறது...
அவசரப் படுவதால்
நிம்மதி தொலையுமே
தவிர
நன்மை எதுவும்
கிடைக்கப்போவதில்லை...!

**ஜானகி**

எனக்கு எப்பல்லாம் மனசு
கஷ்டமா இருக்கோ... அப்போ
எல்லாம் என் பிரண்டுக்கு போன்
பண்ணுவேன்.

உன் நண்பன் ஆறுதல்
சொல்லுவானா?

சீ...சீ... அவன் கஷ்டத்தை எல்லாம்
என்கிட்ட சொல்லுவான்...
அதை கேட்டு என் மனசு
ஆறுதல் அடையும்...

**முல்லை**




வேலைக்கே செல்லாத மகனாய் இருந்தாலும்.. சாப்பிட்டியா என கேட்க அம்மாவால் மட்டுமே முடியும்...


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2000 ஆவது நாளை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

(கிளிநொச்சி)

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது உறவுகளைத் தேடியும், நீதி கோரியும் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2000 ஆவது நாளான நேற்று மாபெரும் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.**




கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியானது டிப்போ சந்திவரை சென்று அங்கு கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதனை தொடர்ந்து நிறைவு பெற்றது.



சர்வதேச விசாரணையை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையகத்திற்கு மகஜர் ஒன்றினையும் அவர்கள் நேற்று அனுப்பி வைத்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத் தருமாறும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலும் நீதியான விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தியும் கோட்டாபய அரசினையும், மகிந்த ராஜபக்ஷ அரசினையும், அவர்களது குடும்பத்தினரையும் கைது செய்து நீதியின் முன் நிறுத்துமாறும் இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன் மற்றும் எஸ். கஜேந்திரன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் உள்ளிட்ட சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (4-100-315-316)

# போராட்டத்தை திசை திருப்ப முற்பட்டவர்கள் விரட்டியடிப்பு

(முறிகண்டி)

ஊடகவியலாளர் என அடையாளம் காட்டி உள்நாட்டு விசாரணையை வலியுறுத்த கோரியோர் விரட்டியடிக்கப்பட்டனர்.

கிளிநொச்சியில் நேற்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தில் இவ்வாறு இடம்பெற்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் போராட்டம் ஆரம்பமாகவிருந்த இடத்தில் இவ்வாறு தம்மை ஊடகவியலாளர்கள் என அடையாளம் காட்டி போராட்டத்தை திசை திருப்ப முற்பட்டவர்களே இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் விரட்டியனுப்பப்பட்டனர்.

தாம் ஊடகவியலாளர்கள் எனவும் இன்றைய போராட்டத்தில் சர்வதேச விசாரணை வேண்டாம், உள்நாட்டு விசாரணை போதும் என கூறி குரல் பதிவு மேற்கொள்ள முயற்சித்தவர்களே இவ்வாறு விரட்டியடிக்கப்பட்டனர். (4-100)

# மன்னாரில் கொரோனா தீவிரம் சுகாதார நடைமுறை கட்டாயம்

## மன்.சுகாதார பணிப்பாளர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த 11 தினங்களில் கொரோனாத் தொற்று மிகவும் அதிகமாக காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ள நிலையில் இந்த மாதத்தின் முதல் 11 நாட்களில் மொத்தம் 103 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது அடையாளம்காணப்பட்டுள்ள கொரோனா தொற்றானது சாதாரண தடிமன், தலையிடி, தலைப்பாரம் ஆகிய அறிகுறிகளுடன் காணப்படுகின்றது.

இவர்களில் அதிகமானவர்கள் வீடுகளில் தங்கி இருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நிலையில் இருக்கிறார்கள். அதற்கு அமைவாக எம்மால் அடையாளம் காணப்பட்டுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை உண்மையான எண்ணிக்கையை விட மிகக் குறைவாக இருக்கும்.

103 நோயளர்கள் எம்மால் கண்டறியப்பட்டால் இதை விட 7 அல்லது 8 மடங்கு நோயாளர்கள் சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு வருகை தராமல் சுய சிகிச்சை பெற்றுக்கொண்டு வீடுகளில் தங்கி இருக்கக் கூடும் என நம்பப்படுகிறது.

இந்த தொற்றானது சாதாரண நிலையில் காணப்பட்டாலும் கூட ஒரு சமூகத்தில் மிகவும் குறுகிய காலத்தில் பரவும் போது திரிபடையக்கூடிய் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இவ்வாறு திரிபடைந்தால் வீரியம் கூடிய வைரஸ் ஒன்று இந்த சமூகத்தில் உருவாகி பரவினால் அதிக உயிரிழப்புகள் ஏற்படும் சந்தர்ப்பம் உள்ளது. கூடிய அளவில் மக்கள் நடமாட்டம் அதிகரித்த இடங்களில் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும்.

மடு திருத்தலத்தில் தற்போது திருவிழா இடம்பெற்று வருகின்றது. நாளை மறுதினம் 15 ஆம் திகதி இறுதி திருவிழா திருப்பலி இடம்பெற உள்ளது.

அதிக அளவிலான பொது மக்கள் மன்னாரில் இருந்தும் நாட்டின் ஏனைய இடங்களில் இருந்தும் மடு திருத்தலத்திற்கு வருகை தந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த மக்களும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-285)

# மண்ணித்தலை செபஸ்ரியார் ஆலய வருடாந்த உற்சவ கலந்துரையாடல்



(பூநகரி)

பூநகரி மண்ணித்தலை செபஸ்ரியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் முன்னாயத்தக்கூட்டம் நேற்று பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலர் த.அகிலன் தலைமையில் நடைபெற்றது.

இம் முன்னாயத்தக் கூட்டத்தில் பூநகரி பொலிஸ் பிரிவினர், பூநகரி படைமுகாம் அதிகாரிகள்,பூநகரிப் பகுதி கடற்படை அதிகாரிகள், சுகாதாரப் பிரிவினர், பூநகரி பிரதேச சபைச் செயலாளர், சுகாதாரப் பரிசோதகர், ஆலயத்துக்குப் பொறுப்பான பங்குத்தந்தை உட்பட பல்வேறு பிரதேச பங்குத் தந்தையினர் என பல தரப்பினரும் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

குடிநீர் விநியோகம், சுகாதார சேவை, மருத்துவ வசதி, பாதுகாப்பு ஏற்பாடுகள், சுற்றாடலை துப்புரவு செய்தல் பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டு உரிய வேலைத்திட்டங்களை அதற்குரிய பகுதியினர் நிறைவேற்றுவர் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. (4-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இளங்கலைஞர்' விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருதாகிய இளங்கலைஞர் விருதுக்கு கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசை நாடகம், இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு).வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோ னியம் போன்றன), கூத்து (வடமோடி, தென்மேரடி, சிந்துநடை), கிராமியக் கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்), ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனக் கலைத் துறைகளுக்கானவை) வாத்தியங்கள் உருவாக்கம் ஆகிய துறைகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் கலைப் பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட ஏற்கெனவே இளங்கலைஞருக்கான கலைச் சான்றிதழ் மற்றும் இளங்கலைஞர் விருது பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாண பிரதச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண் டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன்உரிய கலைத் துறையினை சான்றுப்படுத்தும் ஆவணப் பிரதிகளுடன் 31.08.2022 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்ப ங்களை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ். சுதர்சன தெரிவித்துள்ளார். (4)

# 'யாழ். ரத்னா' விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருதாகிய யாழ்.ரத்னா விருதுக்கு கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசைநாடகம், இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு), வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம் போன்றன) ,கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடை), கிராமியக் கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்), ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனக்கலைத் துறைகளுக்கானவை), வாத்தியங்கள் உருவாக்கம் ஆகிய துறைகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் கலைப் பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பிரதச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்ட60 வயது பூர்த்தியடைந்தவர்களும் இதுவரை இவ்விருதினை பெற்றுக் கொள்ளாதவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையினை சான்றுப்படுத்தும் ஆவணப் பிரதிகளுடன் 31.08.2022 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ். சுதர்சன் தெரிவித்துள்ளார். (4)



சிதம்பரம் நடராஜர் ஆனி உத்தரத் திருவிழாவை முன்னிட்டு சிதம்பரம் மடத்திற்கு காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீன முதல்வர் வருகை தந்திருந்தார். இதன்போது யாழ். சைவபரிபாலன சபையின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், செயலாளர் இரா.செல்வவடிவேல், உபதலைவர் செ. ஜெயபாலசிங்கம், சிதம்பர மடத்தின் பொறுப்பாளர் தி.கணேசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# புல் மேய்ந்து கொண்டிருந்த மாட்டின் காலை துண்டாக்கிய விசமிகள்

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முன்கோடை பகுதியில் காணியொன்றினுள் புல்மேய்ந்த மாட்டின் கால் துண்டாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் - முன்கோடை பகுதியில் காணியொன்றில் மேய்சலிற்காக நின்ற பசு மாட்டின் பின் கால் ஒன்றும் மற்றைய காலில் வெட்டுக்காயமும் ஏற்படும் வகையில் விசமிகளால் மாடு தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் உரிமையாளரால் மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாடு இறக்கும் நிலைக்கு சென்றுள்ளதாகவும் எதுவித உணவும் உட்கொள்ளாமல் இருப்பதாகவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரி மாட்டின் உரிமையாளரால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருப்பதாக தெரிவித்தனர்.

குறிப்பாக பசு மாட்டின் உரிமையாளர் வறுமைக்கோட்டிற்குட்பட்டவராகவும் குறித்த பசு மாட்டின் மூலம் பெறப்படும் பசுப்பாலினை விற்பனை செய்வதே ஜீவனோபாயமாக கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் விலங்குகள் மீதான வன்முறை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்ற நிலையில் இதற்குரிய சட்டநடவடிக்கைகளை உரிய முறையில் முன்னெடுக்க வேண்டும் எனவும் அப்பகுதியினர் தெரிவித்தனர்.

மேலும் விலங்குகள் மீதான வன்முறையில் ஒரு போதும் எவரும் ஈடுபட வேண்டாம் எனவும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-33-104)

# மாடு குறுக்கே சென்றதால் விபத்துக்குள்ளானது ஓட்டோ

(கரணவாய்)

வடமராட்சியில் மாலை சந்தைப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு வீதியின் குறுக்கே மாடு சென்றதால் வீதியால் சென்ற முச்சக்கர வண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து தனியார் கல்வி நிலையம் ஒன்றினுள் புகுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த விபத்தில் காயமடைந்த முச்சக்கர வண்டி சாரதி பருத்தித்துறை ஆதார மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸ் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். . (4-60)

# மோட்டார் சைக்கிள் திருட்டு

(பொற்பதி)

வடமராட்சியில் வீட்டிற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் நேற்று இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வேலையின் நிமித்தம் வெளியில் சென்று விட்டு வந்து வீட்டின் வெளிப்புற வாசலில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளையே இந்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மோட்டார் சைக்கிள் உரிமையாளரினால் மருதங்கேணி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-64)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 380 | 350 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 350 | 400 |
| தக்காளி | 400 | 380 | 380 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 200 |
| கோவா | 380 | 360 | 350 | 400 |
| கரட் | 300 | 340 | 350 | 450 |
| பூசணி | 130 | 120 | 120 | 130 |
| புடோல் | 100 | 100 | 120 | 200 |
| வாழைக்காய் | 120 | 150 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 160 | 170 |
| பாகற்காய் | 400 | 400 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 80 | 240 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 260 | 300 | 350 |
| லீக்ஸ் | 350 | 250 | 280 | 300, |
| பீற்றூட் | 160 | 250 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 700 | 700 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 400 | 500 |
| போஞ்சி | 500 | — | 650 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 200 | 350 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 100 | 120 | 200 |
| பொன்னாங்கண்ணி | 60 | 90 | 100 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 140 | 80 | 140 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நல்லைக்குமரன்' மலர் வெளியீடும் 'யாழ்.விருது' வழங்கலும்









(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் 'நல்லைக்குமரன்' மலரின் 30 ஆவது இதழ் வெளியீட்டு விழாவும் 'யாழ்.விருது' வழங்கும் நிகழ்வும் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.மாநகர சபையின் ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பிரதம விருந்தினராகவும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வில் 'நல்லைக்குமரன்' நூல் சம்பிரதாயபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் இவ் வருடத்துக்கான 'யாழ்.விருது' திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைக்கு வழங்கி வைக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிக்குப் பேருதவி புரிந்த இந்திய அரசுக்கான சிறப்புப் பாராட்டுக் கௌரவத்தை யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்து கொண்டு பெற்றுக் கொண்டார்.

இதேவேளை மேற்படி விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன், சித்தன்கேணி வீணாகாண குரு பீடத்தின் தலைவர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஆசி உரை வழங்கினர். (நி-4-18-33-104)

# காலிமுகத்திடலில் எஞ்சியிருந்த கூடாரங்களும் அகற்றப்பட்டன

(கொழும்பு)

கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் அகற்றப்படாமல் எஞ்சியிருந்த கூடாரங்கள் நேற்று பிற்பகல் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் அகற்றப்பட்டுள்ளதுடன், அங்கிருந்து செல்லாமல் போராட்டக் களப்பகுதியில் தங்கியிருந்த மக்களும் அகற்றப்பட்டுள்ளனர்.

போராட்டக்களத்திலிருந்து வெளியேறுவதற்கு தாம் முடிவெடுத்துள்ளதாக காலிமுகத்திடல் கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் கடந்த 10 ஆம் திகதி அறிவித்திருந்தனர்.

அத்துடன், போராட்டக்களத்திலிருந்து வெளியேறினாலும் கூட எமது போராட்டம் நீடிக்கும். நாங்கள் அரைவாசி வெற்றியை அடைந்தாலும் கூட இன்னும் வெற்றிகளை காண வேண்டியுள்ளது எனவும் அவர்கள் குறிப் பிட்டிருந்தனர்.

எனினும் அப்பகுதியிலிருந்து செல்லப் போவதில்லை என தெரிவித்து சில ஆர்ப்பாட்டக் காரர்கள் அப்பகுதியிலேயே தற்காலிக கூடாரங்களில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கோட்டாவின் அடிப்படை உரிமையை உறுதிப்படுத்துமாறு கோரி மனுத்தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை வருவதற்கு அவரது அடிப்படை உரிமையை உறுதிப்படுத்துமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிவில் மற்றும் சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் என்பவரினால் இந்த மனுத் தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி இலங்கையின் பல்வேறு இடங்களில் மறைந்திருந்து மாலைதீவுக்குச் சென்று அங்கிருந்து சிங்கப்பூர் சென்று தாய்லாந்தில் பாதுகாப்புக் கோர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் பிரஜையும், முன்னாள் முதற் குடிமகனுமான அவருக்கு இலங்கையில் சுதந்திரமாக வசிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஓஷல ஹேரத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறினாரா அல்லது சதி காரணமாக நாடு கடத்தப்பட்டாரா எனக் கண்டறியக் கோரி கடந்த ஜூலை 18 ஆம் திகதி பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் தெளிவான விசாரணைகள் மேற்கொள்ளப் படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.



புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது போராட்டத்திலிருந்து விலகியுள்ளதாகவும் இது தொட[illegible] கவும் மேலும் [illegible] (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 48 சூரி 8 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/12870 | பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 2<br>கி.பா:சூரி 6 செவ் 3 இல் உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்: BSc in Tourism Management Treading Tourism Management<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/12894 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 34 சூரி,செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/12876 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: சூரி 10 செவ் 6 இல் உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: Bachelor of Optometry Optometrist<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி அவுஸ்ரேலிய பிரஜை விரும்பத்தக்கது<br>தொ.இ: G/12895 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா:17 ½ சூரி 2 செவ் 4 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்:A/Lகனடா<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12877 | பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: சூரி 10 செவ் 1 இல் உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்: Computer System and Work Engineering<br>எதிர்பார்ப்பு: கனடா நியூசிலாந்து விரும்பத்தக்கது<br>தொ.இ:G/12897 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் : உத்திரட்டாதி 4<br>கி.பா: சூரி 5 செவ் 6 இல்<br>உயரம்: 5' 9"<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12878 | பிறப்பு:1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: சூரி 9 செவ் 5 இல் உயரம்:5' 2"<br>தகைமை/தொழில்:BSc (IT) அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் சொந்தத் தொழில் காரைநகர் விரும்பத்தக்கது<br>தொ.இ:G/12899 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
[illegible] கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

# சாம்பாரில் தங்கம்



(நேற்றைய தொடர்ச்சி)

உன்னைப் பார்த்தால் திருடிப் பழகியவனாகத் தெரியவில்லை. இந்த நிலை உனக்கு எப்படி ஏற்பட்டது? என்று பரிவுடன் கேட்டார்.

அப்போது நஞ்சப்பன் தன் தந்தை வியாபாரம் செய்து நஷ்டமடைந்து மனம் உடைந்து இறந்து போனதைக் கூறினான். அதன் பின் தான் பணமில்லாமல் கஷ்டப்படுவதையும் தன் ஊரை விட்டே வெளியேறி அவ்வூருக்கு வந்ததையும் அங்கும் குடும்பத்தைக் காப்பாற்ற பணம் கிடைக்கவில்லை என்றும் கூறினான்.

அதைக் கேட்ட எஜமானர் பெரு மூச்சு விட்டு "வியாபாரம் என்றால் லாபம் தான் வரும் நஷ்டம் வராது என்ற எண்ணம் கூடாது. இப்போதுள்ள நிலை உன்னைத் தின்பண்டத்தைத் திருட வைத்தது. நாளை உன் குழந்தைகள் இப்போது நீ செய்வது போலவே திருட்டுத் தொழிலில் இறங்கும் அபாயம் இருக்கிறது.

இன்று உன் பசியைத் தீர்த்தேன். நாளைக்கு வா உனக்கு ஏதாவது வேலை போட்டுக் கொடுக்கிறேன் இப்போது உன் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் சாப்பாடு கட்டி எடுத்துக் கொண்டு போ" என்றார்.

அப்போது நஞ்சப்பன் "நீங்கள் எனக்கும் என் குடும்பத்தவருக்கும் உணவு கொடுத்தீர்கள். அதற்கு மிக்க நன்றி ஆனால் சமையல் எப்படி இருக்கிறது என்று கேட்கவில்லையே" என்றான். அதைக்கேட்ட எஜமானர் ஆச்சரியமே அடைந்தார். அவன் அப்படிக் கேட்டதற்கு ஏதோ ஒரு உட்பொருள் இருக்கிறது என நினைத்தார்.

எனவே அவர் சற்று யோசித்து "சரி நீயே சொல். சமையல் எப்படி இருக்கிறது?" என்று கேட்டார். அவனும் எல்லாம் நன்றாக இருக்கிறது ஆனால், சாம்பாரில் மட்டும் தங்கம் இருப்பது போல் தெரிகிறது" என்றான்.

அவரும் "சாம்பாரில் தங்கமா?" என்று ஆச்சரியத்துடன் கேட்கவே நஞ்சப்பனும் தான் ஒளிந்திருந்த போது முத்தம்மா செய்ததைக் கூறினான். உடனே எஜமானர் சமையற் கட்டிற்குப் போய் சாம்பார் அண்டாவில் என்ன இருக்கிறது என்று பார்த்தார்.

அதிலிருந்து நாலு வடத் தங்கச் சங்கிலி கிடைத்தது. அவர் உடனே முத்தம்மாவைக் கூப்பிட்டு விசாரிக்கவே அவள் தான் அதைத் திருடியதை ஒப்புக் கொண்டாள்.

தின்பண்டம் திருட வந்த நஞ்சப்பன் உண்மையான திருடியைக் கண்டுபிடித்துக் கொடுத்ததில் வீட்டு எஜமானர் பரம திருப்தி அடைந்தார். அவர் மறுநாளே நஞ்சப்பனுக்கு வேலை போட்டுக் கொடுத்து அவன் குடும்பம் கஷ்டப்படாதபடி பார்த்துக் கொண்டார்.

(முற்றும்)

# சிலப்பதிகாரம்

## முடியாத ஊடல்




அவனை நேரில் சந்தித்துப் பேசினாள்.

'வணக்கம்'

கோவலன் பதிலுக்கு வணக்கமும் சொல்லவில்லை ஒரு புன்சிப்புக்கூட சிரிக்கவில்லை. என்ன வேண்டும்? என்றான் முரட்டுத்தனமாக.

மாதவி மிகுந்த வருத்தத்தில் இருக்கிறார்

அதற்கு. நான் என்ன செய்யவேண்டும்?

வருத்தமே உங்களைப் பிரிந்ததில் தானே?

எனக்கு அவளைப் பிரிந்ததில் வருத்தம் ஏதும் இல்லை."

நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. மாதவி தான் செய்த தவறுக்கு மிகவும் வருந்துகிறார். உங்கள் பிரிவு அவரை வாட்டுகிறது. உறவினர்களிடமோ தோழிகளிடமோ பேசுவதே இல்லை.

நல்ல நடிப்பு சீறினான் கோவலன். அவள்தான் பதினாறு வகைக் கூத்துக்களையும் நன்றாகக் கற்றவள் ஆயிற்றே விரகம் வருத்தம் பேதம் எல்லா பாவங்களும் நன்றாக வரும் அவளுக்கு. ஏன்... காதல் நடிப்பில் கூடக் கை தேர்ந்தவள். அது நடிப்பு என்பதை நான் கண்டு பிடிக்கவே நெடுங் காலம் ஆகிவிட்டதே!

"நீங்கள் கோபத்தில் இருக்கிறீர்கள். தயவுசெய்து அவள் எழுதியிருக்கம் இந்தக் கடிதத்தைப் பாருங்கள். சாந்தமடைவீர்கள்"

தேவையில்லை. நான் எந்தக் கடிதத்தையும் படிப்பதாக இல்லை. நீ போகலாம். அதற்கு மேல் பேசுவதில் பலனில்லை என்பது வசந்தமாலைக்குப் புரிந்தது. புறப்பட்டாள்.

மாதவி வீட்டு வாசலிலேயே காத்திருந்தாள்.

அவரைப் பார்த்தாயா?

'ம்ம்ம்'

'எப்படி இருக்கிறார்?'

'நன்றாக'

மாதவி அதிர்ந்தாள் நன்றாகவா? அவர் வருத்தமாக இல்லையா?

"இ... ஆமாம்... வருத்தமாகத்தான் இருந்தார்." வசந்தமாலை ஒருமாதிரியாகச் சமாளித்தாள்.

'அவர் என்னுடைய கடிதத்தைப் படித்தாரா?''இல்லை இன்னும்.'

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.
– அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற்வுகளுக்குப் பதில் தேவை

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர்ச்சியாக நடத்துகின்ற அகிம்சைப் போராட்டம் நேற்று 12ஆம் திகதி இரண்டாயிரம் நாட்களை நிறைவு செய்துள்ள நிலையில், நேற்றைய தினம் மிகப் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றுள்ளது.

படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களைத் தேடி அவர்களின் உறவுகள் சதா கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்ற துன்பம் தாங்க முடியாதது.

தங்களின் பிள்ளைகளைப் பாதுகாப்பார்கள் என்று நம்பி படையினரிடம் ஒப்படைத்தோம்.

ஆனால் அவர்களுக்கு என்ன நடந்ததென்பது இதுவரை தெரியவில்லை. அவர்கள் அங்கு இருக்கலாம். இங்கு இருக்கலாம். சிறைகளில் இருக்கலாம் என்று ஏங்கி ஏங்கி தவிக்கின்ற உறவுகளுக்கு இதுவரை சிங்கள ஆட்சியாளர்கள் எந்தப் பதிலையும் வழங்கவில்லை.

மாறாக காலத்துக்குக் காலம் விளக்கம், விசாரணை என்ற போர்வையில் மக்களை ஏமாற்றுகின்ற கபடநாடகத்தை மட்டும் ஆட்சித் தரப்புகள் செய்து வருகின்றன.

இதில் இன்னும் வேதனை என்னவென்றால், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன? என்பதை அறிந்திருக்கக் கூடிய படையினரிடம் விசாரணை நடத்தி உண்மை நிலையைக் கண்டறிவதில் சிங்கள ஆட்சித் தரப்பு இம்மியும் கருசனை கொள்ளவில்லை.

இதுதான் என்றால், காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பில் உலக நாடுகளும் சர்வதேச பொது அமைப்புகளும் பேசாதிருப்பதுதான் கொடுமையிலும் கொடுமை.

ஆம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் கருத்துரைத்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மக்களின் மனங்களை உறைய வைக்கும் செய்தி ஒன்றைத் தெரிவித்திருந்தார்.

அதாவது பாதுகாப்புச் செயலாளராக கோட்டாபய ராஜபக்ஷ இருந்தபோது, கடத்தப்பட்டவர்கள் முதலைக் குளத்தில் போடப்பட்டார்கள் என்பதே அவர் தெரிவித்த அதிர்ச்சித் தகவலாகும்.

எனினும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறிய மேற்போந்த தகவல் தொடர்பில் நம் தமிழ் அரசியல் தரப்புகள் உட்பட எவருமே அது பற்றி விசாரணை தேவை என்று கேட்காமல் அமைதியாகிவிட்டனர்.

உண்மையில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஒரு நிதானமான அரசியல் தலைவர்.

பொய்யுரைத்து அரசியல் சீவியம் நடத்த வேண்டிய அவசியம் இல்லாத ஒருவர்.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நற்பெயரைக் கொண்டிருக்கக்கூடிய ராஜித சேனாரத்னவின் தகவல் தொடர்பில் அனைவரும் மௌனம் காத்ததுதான் விசித்திரமாக உள்ளது.

பரவாயில்லை. இப்போதுகூட ராஜித சேனாரத்ன கூறிய முதலைக் குளம் பற்றிய விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் ஒலிக்கப்பட வேண்டும்.

அது குறித்து விசாரணைகள் நடத்தப்படும்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பல உண்மைத் தகவல்கள் நிச்சயம் தெரியவரும்

எதுஎவ்வாறாயினும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன? என்பதை அவர்களின் உறவுகளுக்குத் தெரியப்படுத்துவது மிக மிக அவசியமானது.

இதனைச் செய்யாதவரை அந்த உறவுகள் விடுகின்ற கண்ணீர் இந்த நாட்டை உய்ய விடாது என்பது சத்தியமான உண்மை.

# பேருந்து சேவை சீரின்மையால் பாடசாலை மாணவர்கள் பாதிப்பு

(மன்னார்)

இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலையில் இருந்து பின்தங்கிய மடுக்கரை கிராமத்திற்கு செல்லும் பேருந்து சேவை சீரான முறையில் இடம் பெறாமையினால் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சேவையின் மன்னார் சாலையில் இருந்து ஒரு பேருந்து நாளாந்த போக்குவரத்துச் சேவையை மேற்கொண்டு வந்தது.

மன்னார் சாலையில் இருந்து மதியம் 1.30 மணிக்கு உயிலங்குளம், கட்டைக்காடு ஊடாக நானாட்டான் சென்று மடுக்கரையை சென்றடைகின்றது.

பின்னர் அன்றைய தினம் மாலை 3.30 மணியளவில் மடுக்கரையில் இருந்து நானாட்டான், கட்டக்காடு, உயிலங்குளம் ஊடாக மன்னாரை சென்றடைகின்றது.

பின்னர் அன்றைய தினம் மாலை 5.30 மணியளவில் மன்னார் சாலையில் இருந்து வங்காலை, நானாட்டான் ஊடாக மடுக்கரை கிராமத்தை சென்றடைகி ன்றது.

குறித்த பேருந்து மறு நாள் காலை 6.30 மணிக்கு மடுக்கரையில் இருந்து நானாட்டான் ஊடாக மன்னாரை வந்தடைகின்றது. குறித்த பேருந்தில் பாடசாலை மாணவர்கள் பயணிப்பது அதிகம்.

"இந்த நிலையில் அண்மைக்காலமாக மன்னாரில் இருந்து மடுக்கரை கிராமத்திற்கான போக்குவரத்துச் சேவைகள் சீராக இடம் பெறாமையினால் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த போக்குவரத்துச் சேவைகள் சீரான முறையில் இடம்பெறாமையினால் பாட சாலை மாணவர்கள், வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பேருந்து தரிப்பிடத்தில் நீண்ட நேரம் காத்துக் கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த பகுதி மாணவர்கள் மற்றும் மக்களின் நலனை கருத்தில் கொண்டு குறித்த போக்குவரத்து சேவையை உரிய முறையில் மேற்கொள்ள மன்னார் சாலை அதிகாரிகள் முன் வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-285)

## ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு செய்தல்; நேர்முகப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரி மற்றும் டிப்ளோமாதாரர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பித்தவர்களது விண்ணப்பங்களின் பிரகாரம் நேர்முகத்தேர்வுப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளது பெயர் விபரங்கள் 08.08.2022 ஆம் திகதிய வடக்கு மாகாண கல்வி அமைச்சினுடைய இணைத்தளமான www.edumin.np.gov.lk இல்வெளியிடப்பட்டிருந்தது.

இருப்பினும் தவிர்க்க முடியாத நிலைமைகள் காரணமாக 16.08.2022 தொடக்கம் 23.08.2022 வரையான காலப்பகுதிகளில் நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்படுகின்றன.

இவ் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ள திகதிகள் தொடர்பில் பின்னர் அறிவித்தல் வழங்கப்படும் என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளனார். (நி)

## ஒரு இலட்சம் மெற்றிக்தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

ஒரு இலட்சம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் மாதம் உரக் கையிருப்பு நாட்டிற்கு வந்து சேரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

அதன்படி செப்டெம்பர் 15 ஆம் திகதி பெரும்போக பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க முடியும் என எதிர்பார்ப் பதாகவும் விவசாய அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எஞ்சியுள்ள யூரியா உரத்தை பருவத்தின் தொடக்கத்தில் அறு வடை தொடங்கும் பகுதிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

## குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மின் கட்டண சலுகை வழங்க தீர்மானம்

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மின்சாரக் கட்டணம் தொடர்பாக சில சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுக்க முடியும் என எதிர்ப்பார்ப்பதாக பாராளுமன்ற தலைவர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

அதிகரித்துள்ள மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதில் சலுகைகளுக்கு தகுதியான குழுக்களுக்கு சலுகைகளை வழங்குவது தொடர்பில் தற்போது அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத் தில் நிவாரணம் பெற வேண்டிய குழுக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து தற்போது விவாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## கிளிநொச்சியில் நகைக் கடை உரிமையாளர் கடத்தித் தாக்கப்பட்டு 10 பவுண் நகை கொள்ளை

கிளிநொச்சியில் நகைக்கடை வியாபாரி ஒருவர் வேலை முடிந்து வீடு சென்று கொண்டிருந்த போது வானில் வந்த அடையாளம் தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டதுடன், கடையை திறக்க வைத்து 10 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கிளிநொச்சி - கனகபுரம் வீதியில் நகைக்கடை வைத்திருக்கும் குறித்த நபர், வியாபார நடவடிக்கைகளை முடித்து நேற்று முன்தினம் இரவு வீடு சென்று கொண்டிருந்த போது பன்னங்கண்டி பகுதியில் வைத்து வானில் வந்தவர்களால் வழிமறிக்கப்பட்டு கடத்தப்பட்டு நீண்ட நேரம் வானில் வைத்து தாக்கியுள்ளனர்.

அதன் பின்னர் நள்ளிரவு 1 மணியளவில் நகைக்கடைக்கு அழைத்து சென்று கடையை திறக்குமாறு மிரட்டி அங்கிருந்து 10 பவுண் தங்க நகைகளை எடுத்துச் சென்றதுடன், காயங்களுக்கு உள்ளான நபரை அங்கேயே விட்டு சென்றுள்ளனர்.

மேலும், பலத்த காயங்களுக்கு உள்ளான நபர் உறவினர்களின் உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-7)


# இணுவிலில் மூதாட்டி சடலமாக மீட்பு

இணுவில் மஞ்சத்தடி கொட்டம்பனை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் வசித்து வந்த வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தெய்வேந்திரம் வசந்தி வயது 62 என்ற வயோதிப் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கணவர் இறந்த நிலையில் குறித்த வயோதிப பெண் தனிமையில் வசித்து வந்த நிலையில் குறித்த பெண்ணின் 4 பிள்ளைகளில் ஒருவர் இயக்கச்சி பகுதியிலும் இருவர் சுவிஸ் நாட்டிலும் வசித்து வருவதோடு ஒரு பிள்ளை இறந்த நிலையிலும் உறவினர்களின் உதவியுடன் தனிமையில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் வழமை போல் அவரது சகோதரர் மதிய உணவை வழங்குவதற்காக குறித்த பெண்ணின் வீட்டிற்கு சென்ற நிலையில் சடலமாக தனது சகோதரியை இனங்கண்ட நிலையில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்ததோடு சம்பவ இடத்திற்கு சென்ற கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 50

மற்ற பாதி பேர் ஒற்றை உறுப்பினர் தொகுதிகளில் மக்கள் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வெர்கோவ்னா ராடாவில் ஏதேனும் (விகிதாசார) இடங்களைப் பெறுவதற்கு ஒரு கட்சி குறைந்தபட்சம் 4% மக்கள் வாக்குகளைப் பெற வேண்டும்.

உக்ரைனில் 31 மார்ச் 2002 அன்று பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. பாராளுமன்றத்தில் நமது உக்ரைன் கூட்டணி கட்சி (Our Ukraine–People's Self-Defense Bloc) 447 இடங்களில் 111 இடங்களை வென்று மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்தது. 450 மொத்த ஆசனங்களில் 3 ஆசனங்களில் தேர்தல் முடிவுகள் வெளியாகவில்லை.

ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பு, மார்ச் தேர்தலுக்கு முன்னதாக எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய வேட்பாளர்கள் மற்றும் பிரச்சார பணியாளர்கள் மீது உடல்ரீதியான தாக்குதல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் இருந்தன என்று குறிப்பிட்டது. யூலியா திமோஷென்கோ கூட்டணி (Yulia Tymoshenko Blo) ஊடக இருட்டடிப்பு மற்றும் எதிர்மறையான பிரச்சாரம் தொடர்பான மீறல்கள் குறித்து புகார் செய்தது.

இத் தேர்தலுக்கு வாக்களிக்க 37,403,661 பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 25,909,407 பேர் வாக்களித்தனர். செல்லுபடியற்ற வாக்குகள் 963,462 ஆகும். வாக்களிப்பு வீதம் 69.27% ஆகும். எல்லா வேட்பாளர்களுக்கும் எதிராக வாக்களித்தவர்கள் 635,119 ஆகும்.

10 கட்சிகள் சேர்ந்தமைத்த நமது உக்ரைன் கூட்டணி கட்சி 112 ஆசனங்களையும் 5கட்சிகள் சேர்ந்தமைத்த ஐக்கிய உக்ரைனுக்கு கட்சி 121 ஆச்னங்களையும் உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி 65 ஆசங்களையும் பெற்றிருந்தன்.

யுஷ்செங்கோவின் நமது உக்ரைன் கட்சி கீவ் நகரம் உட்பட உக்ரைனின் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் செல்வாக்குப் பெற்றிருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி அதன் பெரும்பாலான வாக்குகளை கிழக்கு மற்றும் தெற்கு பிராந்தியங்களிலிருந்தும் கிரிமியாவிலிருந்தும் பெற்றது.

விக்டர் யானுகோவிச்சின் பிராந்தியக் கட்சியை உள்ளடக்கிய ஐக்கிய உக்ரைன் கூட்டணிக்கு உக்ரைனின் கிழக்குப் பகுதிகளிலிருந்து அதிக வாக்குகள் கிடைத்தன. அதில் டொனெட்ஸ்க் மாநிலம் அக் கூட்டணியின் கோட்டையாக இருந்தது.

யூலியா திமோஷென்கோவின் கூட்டணிக்கு ஆதரவு முக்கியமாக மேற்குப் பகுதிகளில் இருந்து வந்தது. அதே சமயம் சோசலிஸ்டுகள் மத்திய பிராந்தியங்களில் மிகவும் ஆதரிக்கப்பட்டனர்.

உக்ரைன் பிரதம மந்திரிகள் 2002- 2010



விக்டர் யானுகோவிச் (2002-2005)(2006-2007) | யூலியா திமோஷென்கோ (2005) (2007-2010) | யூரி யெக்கானுரோவ் (2005-2006)

2002-2006 வரை 5 முறை பிரதம மந்திரிகள் மாறி மாறி பதவி வகித்துள்ளனர். அவர்கள் மூவரும் வெவ்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாவர். விக்டர் யானுகோவிச்சின் 2 முறையும், யூலியா திமோஷென்கோ 2 முறையும் யூரி யெக்கானுரோவ் ஒரு முறையும் பதவி வகித்தனர்.

## உக்ரைனிய ஜனாதிபதி தேர்தல்- 2004

உக்ரைனில் 31 ஒக்டோபர், 21 நவம்பர் மற்றும் 26 டிசெம்பர் 2004 ஆகிய திகதிகளில் ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. சோவியத் யூனியனில் இருந்து சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து உக்ரைனில் நடந்த நான்காவது ஜனாதிபதித் தேர்தல் இதுவாகும். மொத்தம் 26 வேட்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு ஜனாதிபதி தேர்தலில் கலந்து கொண்டனர். தேர்தலில் இரு முக்கிய போட்டியாளர்கள் அப்போதைய பிரதமரும் அரசாங்கத்தின் ஆதரவு வேட்பாளருமான விக்டர் யானுகோவிச் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் விக்டர் யுஷ்செங்கோ ஆகியோர் ஆவர்.

2002 முதல் பிரதமராக இருந்த விக்டர் யானுகோவிச் அவர்களை வெளியேறும் (அப்போதைய) ஜனாதிபதி லியோனிட் குச்மா மற்றும் ரஷ்ய அரசாங்கமும் மற்றும் அப்போதைய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் ஆதரித்தனர். விக்டர் யுஷ்செங்கோ மேற்கத்தேய சார்புடையவராக சித்தரிக்கப்பட்டார், மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் அமெரிக்காவின் ஆதரவை அவர் பெற்றிருந்தார்.

(தொடரும்)

# அணுமின் நிலையம் மீதான தாக்குதல்கள் பேரழிவுகளுக்கு வழிவகுக்கும்-ஐ.நா.

(கீவ்)

உக்ரைனில் உள்ள ஐரோப்பாவின் மிகப்பெரிய ஐபோரிஸ்ஜியா அணுமின் நிலையம் அருகே நேற்று முன்தினம் மீண்டும் பல குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தத் தாக்குதல்களுக்கு உக்ரைனும் ரஷ்யாவும் மீண்டும் ஒருவரையொருவர் மாறி மாறி குற்றஞ் சாட்டியுள்ளன.

ஐரோப்பாவின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையத்தின் அலுவலகம் மற்றும் தீயணைப்பு நிலையத்தின் மீது நேற்று முன்தினம் வியாழக்கிழமை 10 தடவைகள் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான தாக்குதல்கள் அணுக்கசிவு பேரழிவுகளுக்கு வழிவகுக்கும் என ஐ.நா. அணுசக்தி கண்காணிப்பு அமைப்பின் தலைவர் ரபேல் க்ரோசி ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டத்தில் எச்சரித்துள்ளார். இது ஒரு கடுமையான நேரம். அணுசக்தி பேரழிவுகள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அணுசக்தி ஆலையை அவசரமாக பார்வையிட நிபுணர்களை அனுமதிக்க வேண்டும் என ஐ.நா. பாதுகாப்பு சபையில் சீனா மற்றும் அமெரிக்கா ஆகியன கோரிக்கை விடுத்துள்ளன.

ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளை போர் தவிர்ப்பு வலயமாக அறிவிக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியது. அணு மின் நிலையத்துக்கு அருகில் சண்டையிடுவது ஆபத்தானது மற்றும் பொறுப்பற்றது என அமெரிக்கா விமர்சித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# இராசிபலன்

13.08.2022
ஆடி 28, சனிக்கிழமை
துதியை பின்னிரவு 4.16 மணிவரை


சதயம் பின்னிரவு 3.19 மணிவரை
சுப நேரம் -3.05-4.35 மணிவரை
இராகு காலம் -9.05-10.35 மணிவரை

சந்திராஷ்டமம்
பூசம்

வளவன்



**மேஷம்** – ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வீட்டுத்தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




**கடகம்** – நேசித்த ஒருவருடன் யோசித்து பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, தேவையற்ற விரயங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.




**துலாம்** – கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், வளர்ச்சி கூடும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.




**மகரம்** – குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்; பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும்.




**ரிஷபம்** – சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.




**சிம்மம்** – நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், தொலைபேசி வழியில் உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




**விருச்சிகம்** – சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.




**கும்பம்** – விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன சுகமுண்டு.




**மிதுனம்** – தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.



**கன்னி** – முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.



**தனுசு** – ஆரம்பத்தில் அச்சத்தை தோற்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், உடன்பிறப்புக்கள் வழியே ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.



**மீனம்** – ஆதாயமில்லாத் அலைச்சல்கள் ஏற்படலாம், சுபவிரயங்கள் கூடும் நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

சோகம் என்பது மகிழ்ச்சி என்ற நீருக்காக உனக்குள் சுரக்கும் தாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 பேர்...

ழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற் இந்த மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் பதிவான மொத்த கோவிட் இறப்புகளின் மொத்த எண்ணிக்கை 16,674 ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

## கொழும்பு...

கராச்சிக்கு செல்லும் வழியில் கொழும்புக்கு நல்லெண்ண நோக்கில் பயணித்துள்ளது.

இந்தப் போர்க் கப்பல் கம்போடிய மற்றும் மலேசிய கடற்படைகளுடன் பயிற்சிகளை நடத்திய நிலையிலேயே கராச்சி திரும்புகிறது.

கராச்சியில் பாகிஸ்தான் கடற்படையில் இணைவதற்குச் செல்லும் வழியில் கொழும்பு துறைமுக அழைப்பை ஏற்று பாகிஸ்தானின் இந்த ஏவுகணைப் போர்க் கப்பல் இலங்கை வந்துள்ளது.

இந்த கப்பல் எதிர்வரும் 12-15ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

## இடைநிறுத்த...

அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட 3 அடிப்படை உரிமை மனுக்களை முன்கொண்டு செல்ல உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

எவ்வாறாயினும், அவசரகாலச் சட்டத்தை இடைநிறுத்துவதற்கான இடைக்கால உத்தரவு எதுவும் இந்த சந்தர்ப்பத்தில் பிறப்பிக்கப்படாது என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சம்பந்தப்பட்ட அவசர காலச் சட்ட ஒழுங்குமுறைகளில் உள்ள விடயங்களை மீள்பரிசீலனை செய்யுமாறும், அவ்வாறு ஏதேனும் திருத்தம் செய்யப்படுமாயின் இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறும் சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் மனு மீதான விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் 28ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தபால் கட்டணம்...

தபால் கட்டணங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், குறைந்தபட்ச தபால் கட்டணம் ரூ. 15 இலிருந்து ரூ. 50 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக 2018 இல் விலை திருத்தம் செய்யப்பட்ட நிலையில் மீளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பிரதமர் ஆசனத்...

அல்லது முஸ்லிம் ஒருவர் நாட்டின் பிரதமர் ஆசனத்தில் அமரும்போது அதனை மன மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டில் நடந்த போராட்டம் நாட்டின் அரச தலைவரை மாற்றியது. அந்த போராட்டத்தில் நன்மையான பல விடயங்கள் இருந்தன. 21ஆம் நூற்றாண்டிற்கு பொருந்தும் வகையில் இந்த நாட்டில் இன, மத, சாதிய பேதங்கள் இன்றி மக்கள் ஒன்றிணைந்திருந்தமை போராட்டத்தின் பிரதான அடையாளமாக இருந்தது.

மிகவும் மகிழ்ச்சி. நாம் 21ஆம் நூற்றாண்டை நோக்கி செல்ல வேண்டியது அவசியம். நாட்டில் இன, மத, சாதிய வாதங்களுடன் முன்நோக்கி செல்ல முடியாது. இன, மத, சாதி வேறுபாடுகள் இல்லாத நாட்டை நாம் உருவாக்க வேண்டுமாயின் நாம் எமது மனநிலையை மாற்றிக்கொள்ள வேண்டும்.

குறைந்தது எமது நாட்டின் பிரதமர் ஆசனத்தில் தமிழர் ஒருவர் அமரும் போது மன மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்.

முஸ்லிம் ஒருவர் பிரதமர் ஆசனத்தில் அமரும் போது மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். அந்த மனநிலை இந்த நாட்டில் உருவாகவில்லை.

இந்த ஒற்றுமையை உருவாக்க அரசியல்வாதிகள் அர்ப்பணிப்புகளை செய்வது அவசியம். இழப்பீடுகளை செலுத்த வேண்டியும் ஏற்பட்டது. எனினும் அந்த மா[illegible] யது அவசிய[illegible] ஒத்துழைப்புகளும் அர்ப்பணிப்புகளும் தேவை எனவும் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கைக்கு...

கைகளை இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி திட்டவட்டமாக நிராகரித்தார்.

அமைச்சினால் நடத்தப்பட்ட வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது பேசிய பேச்சாளர், இலங்கை ஒரு இறையாண்மை கொண்ட நாடு, அது சுதந்திரமான முடிவுகளை எடுக்க முடியும் என்று வலியுறுத்தினார்.

எவ்வாறாயினும், இலங்கை-இந்திய உறவுகள் தொடர்பாக, இந்தியா தனது "அண்டை நாடுகளுக்கு முதலில்" கொள்கைக்கு முன்னுரிமை அளிப்பதாக செய்தித் தொடர்பாளர் கூறினார், மேலும் 2022ஆம் ஆண்டிலேயே, பொருளாதார நெருக்கடி யைக் கட்டுப்படுத்த இந்தியா 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு முன்னோடியில்லாத ஆதரவை வழங்கியது.

இலங்கையின் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு இந்தியா முழு ஆதரவளிப்பதாகவும் செய்தித் தொடர்பாளர் பாக்சி குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்தியாவின் பாதுகாப்பு நலன்கள் குறித்து பேசிய அவர், இந்தியாவின் எல்லைப் பகுதிகளில் நிலவும் சூழ்நிலையை இயற்கையாகவே கணக்கில் எடுத்துக் கொள்ளும் "எங்கள் சொந்த நலனுக்காக இந்தியா சிறந்த தீர்ப்பை வழங்கும்" என்று கூறினார். (ம-7)

## விடு...

இந்த சிறைக் கைதிகள் தொடர்பாக முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவின் அறிக்கை கிடைக்கும்வரை காத்திருப்பதாக அமைச்சர் தன்னிடம் கூறியதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை சம்பந்தமாக வெளி[illegible] அறிக்கை மிகவும் பாரதூரமான ஒன்று.

அந்த அறிக்கை வெளியிடப்படும் முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நான் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என நம்புகிறேன்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறும் வடக்கு, கிழக்கில் நடக்கும் காணி ஆக்கிரமிப்புகளை நிறுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தோம். இந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

அத்துடன் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யவும் ஜனாதிபதி இணங்கினார்" எனக் கூறினார். (ம-7)

## யாழ்.நகரில்...

தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காங்கேசன்துறை வீதி மனோகராச் சந்தியில் நேற்று இரவு 8.30 மணியளவில் ஒருவர் மீது வாள்வெட்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது வாள்வெட்டு தாக்குதலுக்கு உள்ளானவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,33)


தன நிதானய
திகதி - 2022.08.12
சீட்டிழுப்பு இலக்கம் - 875
L 17 53 54 68

மஹஜன சம்பத
திகதி 2022/08/12
சீட்டிழுப்பு இலக்கம் 4845
J 2 5 5 4 7 8

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.08.12
சீட்டிழுப்பு இலக்கம் 154
ரிஷபம் 36 45 46 55 ரிஷபம்

மெகா பவர்
திகதி 12/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1193
X 12 51 55 56 60

கொவிசெத
திகதி 2022.08.12
சீட்டிழுப்பு இலக்கம் 3087
C 01 27 47 79
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1820
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.08.12
தினம் வெள்ளிக்கிழமை
B 13 22 63 67
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 2,095,660/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.12
சீட்டிழுப்பு இல : 3981
ரூ. 2,894,500/-
03 10 49 51 O

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 208
சீட்டிழுப்பு திகதி 2022.08.12
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
12 32 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,775,900/-

ராசி
ரூ. 2,363,749.60
திகதி 2022-08-12
3532
29 30 33 54
நீலம்
ரூ. 7,416,060/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 32 10 28 29 67
996
2022.08.12
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 253,170,673/-
011-2 333 546-47

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1646
ரூ. 4,102,180/-
03 13 37 44 E


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீன ஆய்வுக் கப்பலை இலங்கை தடுத்தால்

## சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவி கிடைக்காமல் போகும்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வரும் யுவான் வாங் 5 என்ற சீன ஆய்வு கப்பலின் வருகையை எதிர்ப்பதன் மூலம், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து எதிர்பார்க்கப்படும் கடனைப் பெறும் நடவடிக்கையில் இலங்கை எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கை கடன் நிலைத்தன்மை மதிப்பீட்டு அறிக்கையின் பிரதான கடன் வழங்குநர்களின் அங்கீகாரம் அவசியம்.

இலங்கைக்கு கடன்வழங்கும் முக்கிய நாடுகளில் சீனாவும் ஒன்று, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நடைமுறைக்கு சீனா தனது ஒப்புதலை வழங்க வேண்டியது அவசியமாகிவிட்டது.

ஆனால், சீனா விரும்பினால், இந்தச் செயற்பாடு நீண்ட காலத்திற்குத் தாமதப்படுத்தப்படலாம் எனவும், இதனால் இலங்கையின் பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

**கணிதம், வரலாறு**
**09 - O/L, A/L வகுப்புக்கள்**

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தேசிய ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான். தனியார் கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம். (12416)

**077 482 5438**

### சர்ச்சைக்குரிய கப்பல் விவகாரம்

# சீனா செல்கிறார் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயமாக சீனா செல்லவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்துடன் குறித்த அவரது விஜயத்திற்கு முன்னதாக தற்போது எழுந்துள்ள சீனக் கப்பலான 'யுவான் வான் 5' தொடர்பான சிக்கல் நிலைமையும் தீர்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுவாக, நாட்டில் ஜனாதிபதியானதும் அரச தலைவர் முதலாவதாக அண்டை நாடான இந்தியாவுக்குச் செல்வது வழமையாக இருக்கும். ஆனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது முதல் விஜயமாக சீனாவை தெரிவு செய்ததின் பின்னணியில் அவர் சர்வதேச சமூகத்திற்கு முக்கிய அரசியல் செய்தியை சொல்ல முனைவதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

**காணி விற்பனைக்கு**

**யாழ். நாவற்குழி சந்தியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (12378)

**076 490 5403, 076 491 2493, 076 490 6029**

**வேலையாட்கள் தேவை**

**சாயிரா சுப்பர் மார்க்கட்**

**6.00 am - 2.00 pm**
**2.00 pm - 10.00 pm**

- ☑ அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.
- ☑ ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- ☑ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**355, அரசடி வீதி, நல்லூர்.**
(12425) தொ.பே:- 076 251 7520

# மரண அறிவித்தல்



## சிவானந்தநாதன் சிவராணி

ஏழாலை வடக்கைச் சேர்ந்த சிவானந்தநாதன் சிவராணி அவர்கள் நேற்று (12.08.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா சிவானந்தநாதன் (ஓய்வுபெற்ற C.T.B காப்பாளர் - சித்தப்பாவின்) மனைவியும் காலஞ்சென்ற சிவகுரு - நாகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற பொன்னையா - ஆச்சி முத்துவின் மருமகளும் சரினாவின் தாயாரும் தனுசன், நிலக்கன், பவனுஜா ஆகியோரின் பேர்த்தியும் சிறிதரனின் மாமியும் தயாளன், விமோ, நிமலன் ஆகியோரின் சகோதரியும் சிவபாதசுந்தரம், சிவநாயகி, சிவமணி, சிவனேஸ்வரி, சிவஞானசுந்தரம்(DR ஞானா), சிவயோகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (13.08.2022) சனிக்கிழமை நண்பகல் 11 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் உத்தியோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஆனந்தன் (கணவர்)
(12426)

**பௌதிகவியல் (Physics)**

உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் தனியாகவும் (personal) குழுவாகவும் (Group) கற்பிக்கப்படும். (12421)

**076 157 0107**

**வேலையாள் தேவை**

ஈர அரிசி அரைத்து வறுக்கின்ற நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும். சம்பளம் 1500 இற்கு மேல் (C-4731)

**077 936 1356**

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✔ ONLINE APPLICATIONS
- ✔ VISA APPOINTMENTS
- ✔ PASSPORT APPLICATION
- ✔ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4735)

VISA • STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

**EXECUTIVE OFFICER**

- ✔ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (மேலதிக கொடுப்பனவுகள் உட்பட்டது)
- ✔ வயது-22 தொடக்கம் 35
- ✔ தகுதி- பட்டதாரிகள் (C-4735) (ஆங்கில அறிவு அவசியமானது)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

**நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு**

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த்தொட்டி, வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல்மாடி குளியல் அறைகள், நீரோடிகள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதச் சான்றிதழுடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

மேலும் மாபிள் பதிக்கப்பட்ட குளியல் அறைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை மாபிளை உடைத்து சேதப்படுத்தாமல் சிறந்த இரசாயனங்கள் மூலம் நீர்க்கசிவினை நிறுத்தித்தருகிறோம்.

1 சதுர அடி ரூ.200/- முதல்

**Skyline Water Proofing**

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743
(12423)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.